# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

மானியக் கோரிக்கை எண்.28

## செய்தி மற்றும் விளம்பரம்

❖

மானியக் கோரிக்கை எண்.30

## எழுதுபொருள் மற்றும் அச்சு

# அறிவிப்புகள்
# 2022 – 2023


**மு.பெ. சாமிநாதன்**

செய்தித் துறை அமைச்சர்

# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

மானியக் கோரிக்கை எண்.28

## செய்தி மற்றும் விளம்பரம்

அறிவிப்புகள்

2022 – 2023

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு செய்தித் துறை, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை சார்பாக 22 புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

மேலும், இந்த அறிவிப்புகளை வெளியிட அனுமதி தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**மு.பெ. சாமிநாதன்**

செய்தித் துறை அமைச்சர்

## 1. பத்திரிகையாளர் ஓய்வூதியத் திட்டத்திற்கானப் பணிக்கொடை மற்றும் பணிக்கால ஆண்டு வருமான உச்சவரம்பு உயர்த்தப்படும்.

பத்திரிகையாளர்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப, பத்திரிகையாளர் ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தில் 30.07.2018 அன்று நிர்ணயிக்கப்பட்ட பணிக்கொடை மற்றும் பணிக்கால ஆண்டு வருமான உச்சவரம்பு **ரூபாய் மூன்று இலட்சத்திலிருந்து ரூபாய் நான்கு இலட்சமாக** நடப்பு நிதியாண்டு முதல் உயர்த்தப்படும்.

## 2. பத்திரிகையாளர் நல நிதியத்திலிருந்து வழங்கப்படும் மருத்துவ உதவித் தொகை உயர்த்தப்படும்.

பத்திரிகையாளர் நல நிதியத்திலிருந்து 28.04.2020 முதல் வழங்கப்பட்டு வரும் மருத்துவ உதவித் தொகை **ரூபாய் இரண்டு இலட்சத்திலிருந்து ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரமாக** நடப்பு நிதியாண்டு முதல் உயர்த்தப்படும்.

**3. தமிழில் முதல் நாவல் எழுதிய மாயூரம் முன்சீப் வேதநாயகம் அவர்களுக்கு மயிலாடுதுறையில் அரங்கம் மற்றும் சிலை அமைக்கப்படும்.**

தமிழில் முதல் நாவல் எழுதிய மாயூரம் முன்சீப் வேதநாயகம் அவர்களுக்கு மயிலாடுதுறையில் **ரூபாய் மூன்று கோடி** மதிப்பீட்டில் அரங்கம் மற்றும் சிலை அமைக்கப்படும்.

## 4. வேலூர் மாநகரத்தில் அமைந்துள்ள அண்ணா கலையரங்கத்தினை அண்ணா பல்நோக்குக் கலையரங்கமாக மாற்றி புதியதாகக் கட்டப்படும்.

வேலூர் மாநகரத்தில் அமைந்துள்ள அண்ணா கலையரங்கத்தினை அண்ணா பல்நோக்குக் கலையரங்கமாக **ரூபாய் பத்து கோடி** மதிப்பீட்டில் மாற்றி புதியதாகக் கட்டப்படும்.

## 5. தருமபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள அதியமான் கோட்டம் புனரமைக்கப்படும்.

தருமபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள அதியமான் கோட்டம் **ரூபாய் ஒரு கோடி** மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.

6. **செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள மணிமண்டபங்களில் அமர்ந்து போட்டித் தேர்வுக்கு தயார் செய்ய ஏதுவாக மாணவர்களின் வசதிக்காக 10 மணிமண்டபங்களில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும்.**

**செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள மணிமண்டபங்களில் அமர்ந்து போட்டித் தேர்வுக்கு தயார் செய்யும் மாணவர்களின் வசதிக்காக முதற்கட்டமாக 10 மணிமண்டபங்களில் ரூபாய் ஒரு கோடி** மதிப்பீட்டில் **அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும்.**

**7. செய்தி மக்கள் தொடர்புத் துறையில் உள்ள சுதந்திரப் போராட்ட வீரர்கள், மொழிப்போர்த் தியாகிகள், தமிழ் அறிஞர்கள், முக்கியத் தலைவர்களின் மணிமண்டபங்கள், நினைவகங்கள், அரங்கங்கள் ஆகியவற்றில், அவர்களின் வாழ்க்கை வரலாறு, ஒளிப்படத் தொகுப்புகள் (Photo Album), புத்தகங்கள், காட்சிப்படுத்தப்பட்டு, விரைவுத் துலங்கல் குறியீடு (QR Code) முறையில் காணவும் வழிவகை செய்யப்படும்.**

செய்தி மக்கள் தொடர்புத் துறையில் உள்ள சுதந்திரப் போராட்ட வீரர்கள், மொழிப்போர்த் தியாகிகள், தமிழ் அறிஞர்கள், முக்கியத் தலைவர்களின் மணிமண்டபங்கள், நினைவகங்கள், அரங்கங்கள் ஆகியவற்றில், அவர்களின் வாழ்க்கை வரலாறு, ஒளிப்படத் தொகுப்புகள் (Photo Album), அவர்கள் எழுதிய புத்தகங்கள், அவர்களைப்பற்றி வெளிவந்துள்ள புத்தகங்கள் அனைத்தும்

காட்சிப்படுத்தப்படும். அவர்களைப்பற்றிய குறும்படங்கள் ஒளிபரப்ப ஏதுவாக, முதற்கட்டமாக 15 இடங்களில் அகண்ட திரைத் தொலைக்காட்சி (LED TV) நிறுவப்படும். மேலும், 360 டிகிரியில் படம் எடுத்து சமூக ஊடகங்கள் மற்றும் வலைத்தளங்களில் பொதுமக்கள் கண்டு பயனடைந்திடும் வகையில், **விரைவுத் துலங்கல் குறியீடு** (QR Code) முறையில் இவைகள் பதிவேற்றம் செய்தல், உள்ளிட்டப் பணிகள் **ரூபாய் இரண்டு கோடி** மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

## 8. அரசின் செய்திகள் மற்றும் திட்டங்கள் குறித்த விவரங்கள் உடனுக்குடன் பொதுமக்களைச் சென்றடையும் வகையில், முதற்கட்டமாக பொதுமக்கள் கூடும் முக்கிய பேருந்து நிலையங்களில் மின் சுவர்கள் உருவாக்கப்பட்டு ஒளிபரப்பப்படும்.

அரசின் செய்திகள் மற்றும் திட்டங்கள் குறித்த விவரங்கள் உடனுக்குடன் பொதுமக்களைச் சென்றடையும் வகையில், முதற்கட்டமாக பொதுமக்கள் கூடும் முக்கிய பத்து பேருந்து நிலையங்களில் மின் சுவர்கள் உருவாக்கப்பட்டு ஒளிபரப்பப்படும்.

## 9. தமிழரசு அச்சகத்தின் பயன்பாட்டிற்காக நவீன அச்சு இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்படும்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட "தமிழரசு" மாத இதழ், தமிழ்நாடு அரசின் திட்டச் செயல்பாடுகள், மக்கள் நலத்திட்டங்கள், பல்வேறு அரசுத்துறைகளின் ஆக்கப் பணிகளை மக்கள் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் எளிய நடையில் வண்ணப் புத்தகமாக அச்சிடப்பட்டு மக்களுக்குக் கொண்டு சேர்க்கும் பணியைத் திறம்பட ஆற்றி வருகிறது.

ஓய்வறியா முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் ஒரே ஆண்டில், 13,727 புதிய சந்தாதாரர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும், அரசு இ–சேவை மையங்கள் வாயிலாகவும், சிறப்பு நடவடிக்கைகள் மூலமாகவும் கூடுதல் சந்தா சேர்க்கும் பணி நடைபெற்று வருகிறது.

தமிழரசு அச்சகத்தில் நவீன அச்சு இயந்திரங்கள் **ரூபாய் ஒரு கோடியே எண்பது இலட்சத்து ஐம்பத்து நான்காயிரம்** மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

| வ எண் | விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1) | புதியதாக காகிதம் வெட்டும் இயந்திரம் (Cutting Machine) கொள்முதல் செய்தல் | 56.64 இலட்சம் |
| 2) | புதியதாக அதிக திறன் கொண்ட எண்மிய உற்பத்தி அச்சுப்பொறி (Digital Production Printer) கொள்முதல் செய்தல் | 69.62 இலட்சம் |
| 3) | புதியதாக மடிப்பு இயந்திரம் (Folding Machine) கொள்முதல் செய்தல் | 54.28 இலட்சம் |
| | மொத்தம் | 180.54 இலட்சம் |

**10. தமிழ்நாடு திரைப்படப்பிரிவின் ஊடக மையத்திற்கு புதிய நவீன தொழில் நுட்பக் கருவிகள் கொள்முதல் செய்து மேம்படுத்தப்படும்.**

தமிழ்நாடு திரைப்படப்பிரிவின் ஊடக மையத்திற்கு புதிய நவீன தொழில்நுட்பக் கருவிகள், தற்போது வளர்ந்து வரும் நவீன அறிவியல் தொழில்நுட்பத்திற்கு ஏற்றவாறு **ரூபாய் பதினான்கு இலட்சம் மதிப்பீட்டில்** கொள்முதல் செய்து மேம்படுத்தப்படும்.

**11. தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் எண்மிய மின்னணு வீடியோ ஆவணக் காப்பகப் (Digital e–library) பணியில் மீதமுள்ள 3,700 கேசட்டுகள் எண்மியமாக்கப்படும்.**

தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் வீடியோ பிரிவில் 1989 முதல் மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் முக்கியப் பிரமுகர்களின் நிகழ்ச்சிகள், அரசின் வீடியோ செய்தி மலர்கள், செய்தித் தொகுப்புகள், சட்டப்பேரவை நிகழ்ச்சிகள் என 7,700 கேசட்டுகளில், முதற்கட்டமாக 4,000 கேசட்டுகளை எண்மியமாக்கி மின்னணு வீடியோ ஆவணக் காப்பகம் (Digital e–library) அமைக்கும் பணி நிறைவடையும் நிலையில் உள்ளது.

இப்பணியில், மீதமுள்ள 3,700 கேசட்டுகளை **ரூபாய் நாற்பத்து மூன்று இலட்சத்து அறுபத்து ஆறாயிரம்** மதிப்பீட்டில் எண்மியமாக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

## 12. தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தை உலகத் தரத்திற்கு உயர்த்திட, முதற்கட்டப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு.

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தை நவீன தொழில்நுட்பத்துடன் உட்கட்டமைப்பை மேம்படுத்திடவும், இந்நிறுவனத்தில் பயன்பாட்டிலிருந்த பழம்பெரும் கருவிகளைக் கொண்டு அருங்காட்சியகம் அமைத்திடவும், பாடத்திட்டங்களைத் தரம் உயர்த்தி இந்நிறுவனத்தினை உலகத் தரத்திற்கு உயர்த்திடவும், முதற்கட்டப் பணிகளுக்கு வல்லுநர் குழு அமைத்து அறிக்கை பெற்றிடவும், திட்ட மதிப்பீடு தயாரிக்கவும் **ரூபாய் பத்து இலட்சம்** நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**13. தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் அமைந்துள்ள குளிர்சாதன வசதியுடன் கூடிய படப்பிடிப்புத் தளத்தினை முழு அளவில் புனரமைக்கும் பணிகள், பழைய மாணவர் விடுதி, நீதிமன்றம், சிறைச்சாலை, காவல் நிலையம் ஆகிய படப்பிடிப்புக் கட்டடங்களைச் சீரமைக்கும் பணிகள், படப்பிடிப்புத் தளத்தில் மையப்படுத்தப்பட்ட குளிர்சாதனக்கருவிகள் புதியதாக அமைக்கும் பணிகள், இரண்டு புதிய மின் மாற்றிகள் (11 KV HT, 500 KVA – Transformers) நிறுவும் பணிகள், இதர மின் சீரமைப்புப் பணிகள் ஆகியவை **ரூபாய் ஐந்து கோடியே பத்து இலட்சம்** மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**14. தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன வளாகத்தில் மாணவ/ மாணவியர் மற்றும் பணியாளர்களுக்கு உணவு அருந்தும் அறை (Dining Hall) அமைக்கப்படும்.**

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் மாணவ/மாணவியர் அதிகளவில் பயின்று வருவதால், மாணவ/ மாணவியர் மற்றும் பணியாளர்கள் அமர்ந்து உணவு அருந்துவதற்காக, உணவு அருந்தும் அறை (Dining Hall) இந்நிறுவன வளாகத்தில் **ரூபாய் இருபத்தைந்து இலட்சம்** மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**15. தமிழ்த் திரையுலகில் சிறந்து விளங்கிய வாழ்நாள் சாதனையாளருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் "கலைஞர் கலைத்துறை வித்தகர்" விருது வழங்கப்படும்.**

திரைப்படத் துறையில் மிகச் சிறப்பாகப் பணியாற்றி வருபவர்களுக்குக் கலைத்துறை வித்தகர் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்த் திரையுலகில் சிறந்து விளங்கிய வாழ்நாள் சாதனையாளருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் "கலைஞர் கலைத்துறை வித்தகர்" விருது தமிழ்நாடு அரசின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 3 அன்று வழங்கப்படும். இவ்விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் விருதாளருக்கு **ரூபாய் பத்து இலட்சம் மற்றும் நினைவுப் பரிசு** வழங்கப்படும்.

# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

மானியக் கோரிக்கை எண்.30

## எழுதுபொருள் மற்றும் அச்சு

அறிவிப்புகள்

2022 – 2023

**1) தண்டையார்பேட்டை–காமராஜர் நகரில் உள்ள அரசு அச்சக பணியாளர்களுக்கான குடியிருப்புகளை முற்றிலுமாக இடித்துவிட்டு நவீன வசதிகளுடன் கூடிய புதிய குடியிருப்புகள் கட்டுதல்.**

அச்சுத்துறை பணியாளர்களுக்கென 1962–ஆம் ஆண்டு கட்டப்பட்ட 300 குடியிருப்புகள் 60 ஆண்டுகள் கடந்த நிலையில், மிகவும் சேதமடைந்து குடியிருக்க தகுதியற்ற நிலையில் உள்ளன. எனவே, முதல் கட்டமாக நவீன வசதிகளுடன் கூடிய 160 குடியிருப்புகள் **ரூ.34,54,00,000/– (ரூபாய் முப்பத்து நான்கு கோடியே ஐம்பத்து நான்கு இலட்சம்)** செலவில் கட்டப்படும்.

## 2) முதல் முறையாக அச்சு துறைக்கு தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் அமைத்தல்.

அரசு அச்சகங்களில் செயலாக்கப்படும் அச்சு பணிகளின் தரத்தை உறுதி செய்யும் வகையில் காகித மற்றும் அச்சுப் பொருட்களை தர பரிசோதனை செய்ய கருவிகள் ரூ.53,72,000/- (ரூபாய் ஐம்பத்து மூன்று இலட்சத்து எழுபத்து இரண்டாயிரம்) மதிப்பில் கொள்முதல் செய்யவும், டி65 ஒளியூட்டு வசதி மற்றும் பிற சிறப்பு அம்சங்களுடன் (1500 சதுர அடிகள்) ரூ.55,00,000/- (ரூபாய் ஐம்பத்தைந்து இலட்சம்) மதிப்பில் ஓர் ஆய்வகக் கட்டடம் கட்டவும், அதற்கான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தவும் மொத்தம் **ரூ.1,08,72,000/- (ரூபாய் ஒரு கோடியே எட்டு இலட்சத்து எழுபத்து இரண்டாயிரம்)** நிதியொதுக்கீடு செய்யப்படும்.

## 3) அரசு மைய அச்சகத்திற்கு, நான்கு வண்ண எண்ணிம உற்பத்தி அச்சுப்பொறி (Four Colour Toner Based Digital Production Printer) ஒன்று கொள்முதல் செய்தல்

குறைந்த காலம் மற்றும் செலவில், குறைந்த எண்ணிக்கையிலும், பல வண்ணங்களிலும் வழுவழுப்பான தாள்கள், அட்டைகள் மற்றும் மென் தகடுகள் ஒட்டப்பட்ட அச்சுத் தாள்களில், அச்சுப் பணிகள் செயலாக்கத்திற்காக அரசு மைய அச்சகத்திற்கு நான்கு வண்ண டோனர் அடிப்படையிலான எண்ணிம உற்பத்தி அச்சுப்பொறி (Four Colour Toner Based Digital Production Printer) ஒன்று **ரூ.1,15,00,000/– (ரூபாய் ஒரு கோடியே பதினைந்து இலட்சம்)** மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

## 4) அரசு மைய அச்சகம் மற்றும் 5 கிளை அச்சகங்களுக்கு கருப்பு வெள்ளை எண்ணிம மை தெளிப்பு உற்பத்தி அச்சுப்பொறி (Black and White Inkjet Digital Production Printer) கொள்முதல் செய்தல்

குறைந்த கால அவகாசத்தில், குறைந்த செலவில் குறைவான மனித ஆற்றல் கொண்டு அதிக பக்கங்கள் மற்றும் மாறுபட்ட தரவுகளை (Variable Data) உள்ளடக்கிய அச்சு பணிகளுக்கென அரசு மைய அச்சகம் மற்றும் ஐந்து கிளை அச்சகங்களுக்கு தலா ஒன்று வீதம் மொத்தம் 6 கருப்பு வெள்ளை எண்ணிம மை தெளிப்பு உற்பத்தி அச்சுப்பொறி இயந்திரங்கள் (Black and White Inkjet Digital Production Printer) **ரூ.96,00,000/-(ரூபாய் தொண்ணூற்று ஆறு இலட்சம்)** மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

## 5) நான்கு வண்ண எண்ணிம மை தெளிப்பு உற்பத்தி அச்சுப் பொறி இயந்திரங்கள் (Four Colour Digital Inkjet Production Printer) கொள்முதல் செய்தல்

குறைந்த கால அவகாசத்தில் குறைந்த மனித ஆற்றலுடன் பல்வேறு நிலையிலான அச்சு செயலாக்க நடைமுறைகளை தவிர்த்து, பல வகையான காகிதங்களில், மாறுபடும் தரவுகளுடன் (Variable Data) பல வண்ணங்களில், அச்சு செயலாக்கம் செய்வதற்கு நான்கு வண்ண எண்ணிம மை தெளிப்பு உற்பத்தி அச்சுப் பொறி இயந்திரங்கள் (Four Colour Digital Inkjet Production Printer) இரண்டு எண்ணிக்கை அரசு மைய அச்சகத்திற்கென **ரூ.60,00,000/– (ரூபாய் அறுபது இலட்சம்)** மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

**6) சென்னை, அரசு எழுதுபொருள் அலுவலகக் கட்டடம் ரூ.1,25,00,000/- (ரூபாய் ஒரு கோடியே இருபத்தைந்து இலட்சம்) செலவில் புனரமைக்கப்படும்.**

150 ஆண்டுகள் பழமை வாய்ந்த 60,000 சதுர அடி பரப்பில் சுமார் ஐம்பது கோடி மதிப்புள்ள காகிதங்கள் மற்றும் எழுது பொருட்கள் இருப்பு வைக்கப்படும் அரசு எழுதுபொருள் அலுவலகக் கட்டடம் மிகவும் பழுதடைந்துள்ளதால் இக்கட்டடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி **ரூ.1,25,00,000/- (ரூபாய் ஒரு கோடியே இருபத்தைந்து இலட்சம்)** செலவில் பழுது நீக்கம் செய்து புனரமைக்கப்படும்.

## 7) அரசு மைய அச்சகம் மற்றும் அனைத்து கிளை அச்சகங்களுக்கு நெகிழி அடித்தட்டுகள் (Plastic Pallets) கொள்முதல் செய்தல்

அச்சுப் பணிக்கான காகிதங்களை கரையான்கள், கொறித்துண்ணிகள், கறைபடுதல் மற்றும் மழை நீரிலிருந்தும் பாதுகாத்து முறையாக அடுக்கி வைக்கவும், அச்சிடப்பட்ட காகிதங்களை ஒரு பிரிவிலிருந்து மற்ற பிரிவுகளுக்கு எடுத்துச் செல்லவும், அரசு மைய அச்சகத்திற்கு–100 எண்ணிக்கையிலும், விருத்தாசலம், திருச்சி, சேலம், புதுக்கோட்டை மற்றும் மதுரை அச்சகங்களுக்கு தலா 50 எண்ணிக்கையிலும், மொத்தம் 350 எண்ணிக்கைகள் நெகிழி அடித்தட்டுகள் (Plastic Pallets) **ரூ.21,00,000/– (ரூபாய் இருபத்தொரு இலட்சம்)** மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

**மு.பெ. சாமிநாதன்**
செய்தித் துறை அமைச்சர்